# புல்லாவெளி காவலரண்கள் மீது புலிகள் தாக்கு

நேற்றுப் பிற்பகல் வரையில் புல்லாவெளிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்ற வண்ணமிருந்தது. படையினரின் காவலரண்களை இலக்கு வைத்தே புலிகள் தாக்குதலை நடாத்தி வருவதாகத் தெரியவருகிறது. நேற்று நடைபெற்ற தாக்குதலில் படையினரின் ஒரு கனரக வாகனம் சேதமடைந்ததாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கிடைத்துள்ளன. இதே வேளை நேற்றும் இப்பகுதியில் வை–12 விமானங்களும், குண்டு வீச்சு விமானங்களும் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமிருந்தன. இதேவேளை நேற்று மோதல் ஏதும் பெரிதாக நடைபெறவில்லை எனவும் முன்னேறும் படையினர் தம்மைப் பலப்படுத்துவதில் தற்போது ஈடுபட்டு வருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ரூபவாஹினி செய்தி வெளியிட்டது.

79, 43, 50, 38

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 238 பிரசோற்பத்தி ஆடி 08 ( 24 - 07 - 1991 ) புதன்

## இலங்கை வங்கி நடவடிக்கை ஆரம்பம்

இலங்கை வங்கியின் கிளைகளில் ஊழியர்களின் வரவைப் பொறுத்து இன்று முதல் வங்கிகள் இயங்குவுள்ளதாக இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

மற்றைய அரச திணைக்களங்கள் இயங்குகின்ற போதிலும் இலங்கை வங்கி இயங்

—04ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு முகாமுடனான கொழும்புத் தொடர்பு துண்டிப்பு

ஆனையிறவு இராணுவ முகாமிற்கும் இராணுவத் தலைமைப் பீடத்திற்கும் இடையிலான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை மறுத்துள்ள இராணுவ அதிகாரி ஒருவர் ஆனையிறவு முகாமுடன் தொடர்பு கொண்டால் அதை விடுதலைப்புலிகள் ஒற்றுக்கேட்டுவிடுவார்கள் என்பதினாலேயே தொடர்பு நிறுத்தப்பட்டுள்ளது எனவும், புலிகளின் தாக்குதலில் தொலைத்தொடர்பு எதுவும் பாதிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

## பற்றறிகள் தேவை

அவசரப் பாவனைக்கு அவசியமான பெரிய, சிறிய பற்றறிகள் தேவைப்படுகின்றன. எனவே பொது மக்கள் வர்த்தகப்பிரமுகர்கள் பெரிய, சிறிய அளவுகளிலான பற்றறிகளை அருகில் உள்ள மக்கள் முன்னணிச் செயலகங்களில் கொடுத்து உதவுவதுடன் மேலும் அதிக அளவிலான மண் வெட்டிகள், சாக்கு பிக்கான். உரப்பைகளைப்

—04ஆம் பக்கம் பார்க்க

# 29 படையினரின் சடலங்களும் காரைநகரிலேயே தகனம்!

## சடலங்களைப் பெற்றுக்கொள்ள நண்பகலின் பின்னரே அரசு சம்மதித்தது

புல்லாவெளியில் நடைபெற்ற மோதலில் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்ட படையினரின் 29 சடலங்கள் நேற்று விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. சடலங்களைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா கடற்படையினர் அவற்றைக் காரைநகர் முகாமுக்கு எடுத்துச் சென்று தகனம்செய்து விட்டனர் எனத் தெரியவந்துள்ளது.

முன்னதாகச் சடலங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக நேற்றுக்காலை வரை மௌனமாக இருந்த படையினர் காலை 11 மணியளவில் சடலங்களைப் பொறுப் பேற்பதாகச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து விடு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு

வரலாற்றுத் தொடர்

நாளை வரும்

## செபஸ்தியார் தேவாலயம் குண்டுவீச்சில் சேதம்

புல்லாவெளிக் கிராமத்தின் பிரசித்திபெற்ற கிறிஸ்தவ தேவாலயமான புனித செபஸ்தியார் தேவாலயம் விமானப் படையினரின் குண்டு வீச்சினால் பெரும் சேதமடைந்துள்ளது.

பாஷையூர், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்தும் வடமராட்சிப்பகுதியிலிருந்தும் பல கிறிஸ்தவ மக்கள் இத்தேவாலயத்திற்கு தலயாத்திரை மேற்கொள்வது

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆளியவளை செல்ல முயன்ற படையினர் விரட்டியடிப்பு

புல்லாவெளிப் பகுதியில் படையினர் புலிகளிடம் சிக்கிக் கொண்டதையடுத்து, வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினர் நேற்று முன்தினம் மேற்குப் பக்கமான ஆளியவளைப்

—04ஆம் பக்கம் பார்க்க

## கட்.காட்டில் காயமடைந்தவர் எட்டு நாள்களின் பின் சிகிச்சை

இம்மாதம் 14ஆம் திகதி கட்டைக்காட்டுப்பகுதியில் இடம் பெற்ற கடற்படையினரின் பீரங்கித்தாக்குதலில் காய

—04ஆம் பக்கம் பார்க்க

## படையினரின் சடலங்களை மக்கள் கியூவில் நின்றுபார்வை

வெற்றிலைக்கேணிப் பகுதியில் மோதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட இருபத்தாறு இராணுவத்தினரின் சடலங்கள் நேற்று நண்பகல் 12. 30 மணிவரைக்கும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

கைப்பற்றப்பட்ட இச்சடலங்களில் மூன்று சடலங்கள் முழுமையாக உருக்குலைந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## சமஷ்டித் தீர்வு இந்தியாவைப் பாதிக்காது

இலங்கைஇனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு மூலமாகவே தீர்வு காண முடியும் என இந்தியா ஸ்ரீலங்கா அரசிடம் வற்புறுத்த வேண்டும்என சுப்பிரமணியம்சுவாமி தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இந்தியாவின் பிராந்திய நலன்களும் பாதுகாக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மன்னார், வவுனியா ஊரடங்கு நீக்கம்

மன்னார், வவுனியா மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்கு நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மடு அகதிகள் முகாமுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிக லொறிகள் புறப்பட்டுச் செல்வதையடுத்தே இவ்வூரடங்கு நீக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## 117 படையினர் வடம. கிழக்கில் பலியென அரசு ஒப்புக்கொண்டது

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் நடைபெற்ற மோதலில் 117 படையினர் பலியாகியுள்ளமையைக்கொழும்புச் செய்திகள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. இம்மோதலில் 87 படையினர் பலியானதாகவும் 30 படையினரைக் காணவில்லை எனவும் அச்செய்திகள் தெரிவித்துள்ளன. கொல்லப்பட்ட படையினரில் இராணுவ அதிகாரிகளும் அடங்குவர் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. இதே வேளை ஆனையிறவு மோதலில் முகாமை முற்றுகையிட்டுள்ள விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களையும் பிரயோகிப்பதாக இந்திய வானொலி குறிப்பிட்டது.

## மடு முகாமுக்கு லொறிகள்

மடுவில் உள்ள 26000 அகதிகளுக்கு லொறிகள் மூலம் உணவு அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி பதினெட்டு லொறிகளில் 180 மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்கள் நேற்று அனுப்பிவைக்கப்பட்டன.

கடந்த வாரம் அனுராதபுரத்திலிருந்து வந்து அத்தியாவசியப் பொருள்களுடன் வவுனியாவில் தரித்து நின்ற லொறிகளே நேற்று மடுவுக்கு வந்து சேர்ந்தன. 33

★ அகில இந்திய வானொலி நிருபர் கூறுகிறார்

# ஆனையிறவை நோக்கிப் படைகள் முன்னேற முடியாது உள்ளனர்

ஆனையிறவு நோக்கி வரும் இராணுவ அணிகளால் முன்னேற முடியவில்லை என்று கொழும்பிலுள்ள அகில இந்திய வானொலி நிருபர் தெரிவித்துள்ளார்.

பதுங்கு குழிகளை வெட்டித் தமது நிலைகளை ஸ்திரப்படுத்திக்கொண்டுள்ள விடுதலைப் புலிப் போராளிகளின் கடும் எதிர்ப்பும் படையினரின் முன்னேற்றத்தை நிறுத்திவிட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு அதிக பலமாக மேலும் பலபோராளிகள் ஆனையிறவுப் பகுதிக்குச் சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வேலணையில் சிகிச்சை

வேலணை வைத்தியசாலையில் குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கான வாராந்த சிகிச்சை (கிளினிக்) வழமை போல் நடப்பதாகவும், உரியவர்களை வருகை தருமாறும் வேலணை வைத்திய அதிகாரி ஆ. திருநாவுக்கரசு கேட்டுள்ளார்.

தற்பொழுது நோயாளர்கள் வாட்டில் அனுமதிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-12)

## உரும்பிராயில் கண்ணீர் அஞ்சலி

ஆனையிறவு கட்டைக்காட்டுப் பகுதியில் வீரமரணம் அடைந்த போராளிகளுக்கு உரும்பிராய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏராளமான மக்கள் வீதிகளில் திரண்டு குத்துவிளக்கேற்றி மலர்கள் சொரிந்து கண்ணீர் மல்க வீர அஞ்சலி செலுத்தினர்.

இதில் இளைஞர், யுவதிகள், மாணவர்கள் மட்டுமின்றி முதியவர்களும் பெரிதும் ஈடுபாடு காட்டியதை அவதானிக்க முடிந்தது. (16)

அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி

## இந்த மண்ணில் பிறந்தவருக்கு அச்ச உணர்வு வரக்கூடாது

யுத்தமுனையில் போராடிக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு அவ்விடத்தில் உதவி புரிய பெருமளவு உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர். இப்போர் முடியும்வரை ஒவ்வொரு தமிழ் மகனும் தனது சொந்தப் பிள்ளையின் உயிர் ஊசலாடிக்கெகண்டிருக்கும் போது எப்படி உறக்கமின்றி, உணவின்றி, அவசரஅவசரமாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பானோ அந்த உணர்வு வரவேண்டும். போராளிகள் உங்களுக்காகவே போராடுகின்றனர்.

இவ்வாறு கோண்டாவில் மக்கள் முன்னணிச் செயலகத்தில் கிராமமட்டத்திலான பொது ஸ்தாபனங்களுடனான கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நாம் நாட்டை மறந்து நின்று வாழ முடியாது. நாட்டுப் பிரச்சினை வீட்டில் எதிரொலிக்கும் நாம் ஒதுங்கியிருந்தால் இராணுவம் எம்மை அழித்துவிடும். இது தமிழனின் வரலாறு. பயம் இந்த மண்ணில் பிறந்த எவருக்கும் வரக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆலயம் சேதம்

வடமராட்சி கிழக்குப் பகுதியான பிரசித்திபெற்ற மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயமும் அண்மையில் இடம்பெற்ற பொம்மர் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்துள்ளது

இவ் ஆலயம் வடமராட்சிப் பகுதியில் மிகவும் பிரபல்யம் பெற்றதாகும். 11

பண்டத்தரிப்பு தெ. ப. பொ. சங்கம்

## கள்ளில் கலப்படம் செய்தால் அபராதம் விதிக்கப்படும்

பண்டத்தரிப்புபரிஷ் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கம் அதன் விற்பனை நிலையங்களில் கள்ளில் கலப்படம் செய்வதைத்தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக சகல அங்கத்தவர்களுக்கும் சங்கம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

கள்ளில் கலப்படம் செய்தால் முதலாம் முறை 100 ரூபா தண்டமும் எச்சரிக்கையும், இரண்டாம் முறை இவ்வாறு செய்தால் போத்தல் ஒன்றுக்கு 50 ரூபா, மூன்றாம் முறை போத்தல் ஒன்றுக்கு 50 ரூபாவும் மேலதிகமாக 100 ரூபாவும், நாலாம்முறை அங்கத்துவ இடை நீக்கம் என அறிவிக்கட்பட்டுள்ளது.

சட்டவிரோத கள் விற்பனைக்கு முதலாம் முறை ஒரு போத்தலுக்கு 50 ரூபாவும் பாவனையாளருக்கு 100 ரூபாவும் அபராதமாக விதிக்கப்படும்.

இரண்டாம் தடவை ஒரு போத்தல் விற்பனைக்கு 100 ரூபாவும் பாவனையளருக்கு 100 ரூபாவும் அபராதம் விதிக்கப்படும்.

மூன்றாம் முறையில் ஒரு போத்தலுக்கு 300 ரூபாவும் பாவனையாளருக்கு 100 ரூபாவும் அபராதம் நாலாம் முறையில் அங்கத்தவர் இடைநிறுத்தம் செய்யப்படுவர்

## நெல்லை க. பேரனுக்கு அஞ்சலிக் கூட்டம்

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவபபட்ட ஷெல்லிற்குப் பலியான எழுத்தாளர் நெல்லை. க. பேரனின் இரங்கல் கூட்டமொன்றை பருத்தித்துறை அறிவோர் ஒன்றுகூடலினர் பருத்தித்துறை அலுவலகத்தில் நடாத்தினர்.

வைத்திய கலாநிதியும் எழுத்தாளருமான எம் கே. முருகானந்தன் இவ் இரங்கல் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில்எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமரர் நெல்லை க. பேரனின் நினைவு மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது. (15)

## காரைநகரில் கர்ப்பிணிகள் மருந்துகள் இன்றி அவதி

காரைநகரில் உள்ள கர்ப்பிணிகள், மற்றும் கடும் நோயாளர்கள் மருத்துவ வசதிகள் இன்றி பெரிதும் அவதிப்படுவதாக அங்கிருந்து வரும்செய்திகள் கூறுகின்றன.

கர்ப்பிணிகள், இருதய நோய், நீரழிவு போன்ற கடும் நோயாளிகளுக்கு விட்டமின் மருந்துகள்,நோய்க்குரிய மருந்துகள் என்பன கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

சுமார் ஐம்பது கர்ப்பிணிகள் வரை அங்கு இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் குழந்தை ஒன்றைப் பிரசவித்த பெண்மணி ஒருவர் எதுவித பராமரிப்பு வசதிகள் இன்றி இருப்பதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இருதய நோய்க்குரிய மருத்துவ சிகிச்சை கிடைக்காத ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் இறந்துள்ளதாகவும் தெரியவருகிறது. 79,33

## தீர்த்தத்திருவிழா

இலங்கையின் இரண்டாவது கதிர்காமமான தென்புலோலி தான்தோன்றி உபய கதிர்காம முருகன் ஆலய தீர்த்தத்திருவிழா இம் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (15)

## பொன்னாலைப் பகுதி மீனவர் அரச அதிபரிடம் மகஜர்

இராணுவ நடவடிக்கையினால் கடற்றொழில் செய்ய முடியாது மிகவும் வறிய நிலையிலுள்ள சுமார் நூறுக்கும்மேற்பட்ட பொன்னாலைப் பகுதி மீனவக் குடும்பங்கள் தமது நிலைமை குறித்து உதவிகோரி மகஜர் ஒன்றை யாழ் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பாக கடற்படையினரின் அட்டகாசத்தினால் தாம் தொழில் புரிய முடியாதுள்ளதாகவும், இதனால் தங்களது குடும்பங்கள் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், தங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கி தங்களது கஷ்ட நிலையைப் போக்குமாறும் அம்மகஜரில் கேட்டுள்ளனர்.

இம்மகஜருக்கு செயலக மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும் தற்போது இடம் பெறும் கரையோரப் பகுதி இராணுவ நடவடிக்கையினால் பல்லாயிரக் கணக்கான மீனவக் குடும்பங்கள் வருமானம் இன்றி கஷ்டப்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது. (74 10)

## போலிக் கடவுச்சீட்டுடன் கனடா செல்ல முயற்சி

யாழ் வாசி இரத்தின சபாபதி வாமதேவன் போலிக் கடவுச் சீட்டுடன் கனடாவுக்குச் செல்ல முயன்றபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு சி ஐ.டி. பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

வேறொருவரின் கடவுச்சீட்டில் தனது படத்தை ஒட்டிப் பயணம் செய்ய முயன்றதாக இவர் மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

செல்ல முடியாத

## நெடுந்தீவு மக்களுக்கு உடனடி நிவாரண உதவி

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவை ஸ்தம்பிதம் அடைந்ததைத் தொடர்ந்து நெடுந்தீவுக்குச் செல்ல முடியாது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் 124 பேருக்கு யாழ் மாவட்ட அரச அதிபர் க. மாணிக்கவாசகரின் முயற்சியினால் யாழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் உலர் உணவுப் பொர்ருள்களை வழங்கியுள்ளது.

இவர்களுக்கான இவ் உலர் உணவுகள் நேற்று முன்தினம் சுண்டுக்குளி புனித யுவானியார் தேவாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. (33)

## இந்தியாவுக்குக் கடன்

இந்தியாவுக்கு 660 கோடி ரூபாவைக் கடனாக வழங்க சர்வதேச நிதி நிறுவனம் தீர்மானித்துள்ளது.

எரிபொருள் இறக்குமதிக்கும், ஏற்றுமதிச் செலவைச் சமப்படுத்தவுமே இந்த நிதியுதவி கிடைக்கிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ் சிகரெட் முகவர் வவுனியாவில் கைது

யாழ்ப்பாணம் சிகரெட் முகவர் வவுனியாவில் கைதாகி விசாரணையின் பொருட்டு தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றார்.

சிகரெட் பெட்டிகளுக்குள் கறுப்புக்காற்சட்டை துணிகள் பெருமளவு மறைத்து வைக்கப்பட்டிருந்ததினை இராணுவ சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் காரணமாகவே அவர் விசாரணையின் நிமித்தம் வவுனியா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என அறியமுடிந்தது. (11)

## 1987 ஜூலை ஒப்பந்தத்தை இந்தியா ஏற்றுவந்துள்ளது

1987 ஜூலை கைச்சாத்தான இலங்கை இந்திய ஒப்பந்தம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இன்னமும் வழிவகுக்கிறது என இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை இந்தியா எப்போதுமே ஏற்று நடந்துவந்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா இவ்வொப்பந்தம் குறித்து பத்திரிகைக்கு அளித்த பேட்டி தொடர்பாகவே இந்த அதிகாரி இப்படிக் கூறினார்.

## செய்தித்தாள் கண்ணோட்டம் தினகரன் பத்திரிகை மட்டுமே

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையில் நேற்றுச் செய்தித்தாள் கண்ணோட்டத்திற்கு அரச சார்பான லேக்ஹவுஸ் பத்திரிகையான தினகரனே கிடைத்துள்ளதாக அறிவிப்பாளர் கூறியுள்ளார்.

ஆனையிறவு, கட்டைக்காடு மோதல்கள் குறித்து ஏனைய பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்திகள் அரசுக்குச் சார்பாக இல்லாததே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் 'ஐலண்ட்' பத்திரிகை இராணுவம் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளாததால் ஆனையிறவில் புலிகளின் முற்றுகையை விடுவிக்க முடியவில்லை எனக் கண்டித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டம் ஒத்திவைப்பு

27 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள், உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டமும், உலர் உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டமும், மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமும் பிற்போடப்பட்டுள்ளன என்றும் அவற்றிற்கான புதிய திகதிகள் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும் எனவும் அரச அதிபர் அறிவித்துள்ளார். 74, 10

## அமைச்சரிடம் கோரிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணங்ளில் சுமுக நிலை ஏற்படும் வரை இம்மாகாணங்களில் கடமையாற்றும் சகல அரசாங்க அலுவலர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் கஷ்ட ஊக்குவிப்புப் பணம் வழங்கப் படவேண்டும்.

பொதுநிர்வாக உள்நாட்டு, மாகாண சபைகள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவிடம் வட பிராந்திய இ. தொ. க. பொறுப்பதிகாரி பி. மதுரப்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார். (11)

## வெளிநாட்டு வங்கியை மீண்டும் இயக்க நடவடிக்கை

பாங் ஒவ் கிறடிற் அன்ட் கொமேர்ஸ் இன்ரர்நஷனல் வங்கியின் கொழும்புக் கிளையை இலங்கையில் உள்ள வங்கி ஒன்று பொறுப்பேற்று நடாத்தவுள்ளது.

இந்த வங்கியில் பெருமளவு மோசடிகள் இடம்பெற்றதையடுத்து உலக நாடுகளில் உள்ள இதன் கிளைகளை அந்தந்த நாடுகளின் மத்திய வங்கிகள் இம் மாதம் 5ஆம் திகதி முதல் மூடியிருந்தன.

இதனையடுத்து கொழும்பிலுள்ள இதன் கிளையும் மூடப்பட்டது.

முரசொலி

எமது சிந்தனை

24 . 07 . 91

# விடுதலைப் போராட்டமும் வர்த்தகர்களின் கடமையும்

தற்பொழுது தமிழீழ மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் தமிழின விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், விடுதலை வேங்கைகள் குதித்திருக்கும் ஒரு தியாக வேள்வியாகும்.

விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும், அடக்கவும், சிங்கள இனவாத அரசு பல்வேறு இன்னல்களையும் இடைஞ்சல்களையும் ஏற்படுத்தும் என்பதை எதிர்பார்த்தே இந்தப் போராட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது.

சமூகத்தின் எல்லாத் துறைகளிலுமுள்ளவர்கள் யாவரும் இத்தகைய துன்பங்களை விடுதலையின் பொருட்டு எதிர்த்தும், போராடியும், தாங்கியும், சகித்தும் வருகின்றனர்.

சிறிலங்கா அரசு 1986 முதல் அமுல் செய்து வரும் பொருளாதாரத் தடைகள், போக்குவரத்துத் தடைகள் என்பன தமிழீழ மக்கள் அனைவரையும் விதிவிலக்கின்றி பாதிப்பனவாகும். ஆகவே அவற்றை எதிர்த்து வெல்லும் பொறுப்பு சகலரையும் சார்ந்ததாகும்.

இந்த வகையில் வர்த்தக சமூகத்தின் பொறுப்பு மிக உயர்ந்ததாகும். பெருவர்த்தகர்கள் ஆனாலும் சிறுவர்த்தகர்கள் ஆனாலும் வீதியோர வியாபாரிகள் ஆயினும் அவர்களது கடமையும் பொறுப்பும் மகத்தானது.

சிறிலங்கா அரசபடைகள் உணவுப் பொருள் உள்வருகையைத் தடை செய்த போது தமது உயிரைப் பணயம் வைத்துப் பொருள்களை சைக்கிள்களில் கொண்டு வந்து விற்பனை செய்த சைக்கிள் வியாபாரிகளின் சேவை குறிப்பிடத்தக்கதாகும். இது இன்றும் தொடர்கிறது; சிறிலங்கா அரசின் எதிர்பார்ப்பை உடைத்தெறிந்து கொண்டும் இருக்கிறது.

இதே போல சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் உட்கொணரக் கூடிய உச்சத் தொகைப் பொருள்களைக் கொண்டு வந்து விற்பனை செய்த மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் பாராட்டுக்குரியவர்களே.

ஆனாலும் அடிக்கடி இடம் பெற்ற போக்குவரத்துத் தடைகளையும் ஊரடங்குகளையும் காரணமாக்கி சில வர்த்தகர்கள் பதுக்கல் நடவடிக்கைகளிலும் விலை அதிகரிப்புகளிலும் ஈடுபட்ட காரணத்தால் இவ்வருட ஆரம்பத்திலிருந்து விலைக்கட்டுப்பாடுகள் அமுல் செய்யப்பட்டன. அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கியவர்களும் கட்டுப்பாட்டு விலைகளை மீறியவர்களும் அபராதங்கள் செலுத்த வேண்டி ஏற்பட்டது. இதற்கும் மேலாக பல சிறு வியாபாரிகள் தம் தொழில் வருமானங்களை இழக்கவும் நேரிட்டது

சகல மட்டத்திலுமுள்ள வியாபாரிகளும் எம் மக்களே என்பதாலும், மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை அவர்களும் எதிர் கொள்வதாலும் அவர்கள் சமூகப் பொறுப்புடன் செயற்படுவர் என்ற நம்பிக்கையின் பேரிலும் விலைக்கட்டுப்பாட்டு அமுலாக்கம் தளர்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து பலர் மீண்டும் தொழில் வருமானம் பெறவும் பொருள்கள் ஓரளவு சந்தையில் கிடைக்கவும் ஏதுவாயிற்று.

யூலை 10 ஆம் திகதி வடபகுதி பூராவும் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொருள்கள் உள்வருகை தடைப்பட்டது. இதனைச் சாட்டாக வைத்து மண்ணெண்ணெய், சவர்க்காரம், சீனி, தேங்காயெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை நியாயமற்றதும் நியாயப்படுத்த முடியாததுமாகும்.

இப் பொருள்கள் புதிதாக, அதிக விலையில் கொண்டு வரப்படுபவை அல்ல. ஏற்கனவே இம் மண்ணில் இருப்பாக உள்ள பொருள்களுக்கு விலை அதிகரிப்புச் செய்வது சமூகப் பொறுப்பை மீறியதும், தம் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பொய்ப்பிக்கும் நடவடிக்கையுமாகும்.

இருப்பு இருக்கின்ற பொருள்களைப் பதுக்காமலும் விலை அதிகரிப்புச் செய்யாமலும் மக்களுக்கு விற்பனை செய்வதே வர்த்தக சமூகத்தினரின் பொறுப்பும், கடமையும், தர்மமுமாகும். கட்டுப்பாடுகளைச் சமூகம் அவர்கள் மீது விதிக்காமல், தாமாகவே தமக்கென இவ்வாறான நடைமுறைக் கட்டுப்பாடுகளை விதித்து வர்த்தக சமூகம் செயற்படுவதே தற்போதைய தேவையாகும்.

''முப்பது கோடியும் வாழ்வோம்— வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.''

என்றார் பாரதியார்.

தமிழீழ மக்கள் இந்தச் சோதனைகளைத் தாங்கி எழுவார்கள்; வாழ்வார்கள்; ஐயமில்லை.

அப்படி நிமிரும் வேளையில் யார் யார் மக்கள் பக்கம் நின்றார்கள், யார் மக்களைச் சுரண்டி அவர்கள் துன்பத்தில் குளிர் காய்ந்தார்கள் என்று ''இருப்பு'' எடுப்பார்கள்.

வியாபாரிகள் இதை உணர்ந்து கொள்வது நல்லது.

இலாப நோக்குடன் செயற்படாது முழுத் தமிழின நலன் காக்கும் நோக்குடன் சமூகத்துடன் இணைந்து வர்த்தக சமூகம் செயற்படுவதையே தமிழ்ச் சமுதாயம் எதிர்பார்க்கிறது.

★ இயற்கை அழிவு, இராணுவ நடவடிக்கை

# அகதிகளுக்கு நிவாரண உதவி

# அரச அதிபர்களுக்கு சுற்றுநிருபம்

இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இயற்கை அழிவுகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய உதவிகள் குறித்து சகல அரசாங்க அதிபர்களுக்கும் அத்தியாவசிய சேவைகள் நாயகம் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்வாறு இடம்பெயர்ந்து வரும் குடும்பங்களுக்கு உடனடியாக மூன்று தினங்கள் சமைத்த உணவு வழங்கப்பட வேண்டும்.

அதன் பின்னர் 12 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு 8 ரூபா உலர் உணவுப் பொருளும், அதற்கு மேற்பட்டோருக்குப் 15 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள் வீதம் தினமும் வழங்க வேண்டும்.

இடம்பெயர்ந்தபோது இறந்தவரின் குடும்பத்துக்கு 2,000 ரூபா மரணச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் இடம்பெயர்ந்த குடும்பத்திற்கு 500 ரூபா பெறுமதியான வீட்டுக்குத் தேவையான பாத்திரங்களும் கொடுக்க வேண்டும்.

இடம்பெயர்ந்த குடும்பம் தற்காலிகமாகப் பழைய இடத்துக்குத் திரும்பும்போது 1000 ரூபா சுயதொழில் முயற்சி உதவியாக வழங்க வேண்டும்.

இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளைத் திருத்தப் பத்தாயிரம் ரூபாவும், குடிசையாயின் ஆயிரம் ரூபாவும் வழங்க வேண்டும்.

அரசாங்க அதிபர்கள் தத்தமது பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு இதனை அறிவித்து கிராம சேவையாளர்கள் மூலமாக இந்த உதவிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (74)

## இரண்டு பிரிவுகளில் சுகாதார வைத்திய அதிகாரி

வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு என இரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

புதிய கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் செல்வி உமா இந்திரராசா பொலநறுவையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பணியாற்றி வந்தார்.

வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு இரண்டு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டமையினால் வடமராட்சிப் பகுதியின் கிராமிய சுகாதார வசதிகளை மேம்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

## புதிய ஆறு குருக்கள்
### 30 ஆம் திகதி திருநிலைப்படுத்தப்படுவர்

யாழ் மறை மாவட்டத்தில் ஆறு புதிய குருக்களுக்கு யாழ் ஆயரினால் குருப்பட்டம் வழங்கப்படவுள்ளன,

அருட் சகோதரர்கள் ஞா. பீற்றர், சூ.அ. ஜோர்ச், யோ. மவுலிஸ், ம. யேசுரட்டினம், அ. யோ. யாவிஸ் ஆகிய ஐவரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் குருவாகத்திருநிலைப்படுத்தப்படுவர்.

இதே திருநிலைப்படுத்தல் சடங்கில் கிளரீசியன் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர் ரெக்ஸ் கொன்ஸ்ரன்ரைனும், திருநிலைப்படுத்தப் படுவார். (16)

## போராளிகளுக்காக விசேட பூசை

ஆனையிறவு முகாமைக் கைப்பற்றுவதற்காகக் கடும் போரில் ஈடுபட்டு வரும் போராளிகளுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்றும் வீரமரணமடைந்த போராளிகளின் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றவும் வேண்டி வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவிலில் நேற்றுக்காலை 9 மணியளவில் விசேட அபிஷேகமும் பூசையும் கூட்டுவழிபாடும் நடாத்தினர். (12)

தி, மு. க கூட்டணியினர்

## சட்டசபை இடைத் தேர்தலை ஒத்திவைக்கக் கோரிக்கை

தமிழ்நாட்டில் அடுத்த மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள நான்கு சட்டசபை இடைத் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் தலைமைத்தேர்தல் அதிகாரியிடம் கேட்டுள்ளன.

தி.மு.க. ஜனதாதள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சித்தலைவர்கள் இது தொடர்பான மகஜர் ஒன்றை தேர்தல் அதிகாரியிடம் கையளித்தனர்.

அடுத்த மாதம் 30 இல் நடைபெறவுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளும், சட்டசபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் கலவரங்களையும், குளப்பங்களையும் ஏற்படுத்தும் எனவும் அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர்.

க. பொ. த. மாணவர்களுக்கு

## அடையாள அட்டைகள் வழங்க முடியாத நிலை

அடுத்த மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்பலருக்குத்தேசிய அடையாள அட்டைகளை உடனடியாக வழங்க முடியாதிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதனால் மாணவர்கள் தபாற்கந்தோர் அடையாள அட்டைகளையோ அல்லது வேறு அடையாள அட்டைகளையோ பாவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## நிவாரணம்

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட நாலாயிரம் குடும்பங்களுக்கு 6 ஆம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. (ப 35)

## ஒரு லட்சம் வைரசுக்கள் தும்மும்போது வருகின்றன

உங்களுக்கு சமீபத்தில் உள்ள ஒருவர் தும்ம எத்தனிக்கும் பொழுதே உங்கள் நாசியைக் கைக்குட்டையால் அல்லது துணியால் மூடிக் கொள்வது உசிதம் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஏன் என்றால் ஒருவர் ஒரு முறை தும்மும்போது அவர் நாசியில் இருந்து வெளிப்படும் காற்றில் சுமார் எட்டுக் கோடி ஐம்பது லட்சம் வைரசுக்கள் இருக்கின்றன என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மேலும் அத்தும்மலின் வேகம் சாதாரணமாக நூற்றி அறுபது கிலோ மீற்றராகவும் இருக்கும் எனக் கணக்கிட்டுள்ளார்கள். (16)

## அதிகாரியாகப் பதவி உயர்வு

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபரும் புலோலி கொத்தணி அதிபருமான வி.சே. ஏகாம்பரநாதன் கல்வித் திணைக்களத்தால் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்த்தப்பட்டு வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகக் கல்வி அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

வேலாயுதம் மகாவித்தியாலத்தில் உப அதிபராகக் கடமையாற்றிய எஸ். தேவராஜா அதிபராக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார். (15)

## மரணக் கொடுப்பனவு வவுச்சர்கள் அனுப்பப்பட்டன

வன்செயல் மற்றும் இராணுவ நடவடிக்கையால் கணவன்மார்களை இழந்த விதவைகளுக்கும் குடும்பத்தின் மூத்த உழைப்பாழியான பிள்ளைகளை இழந்த பெற்றோருக்கும் மரண நஷ்டக் கொடுப்பனவு வவுச்சர்கள் அவர்களால் தரப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவநடவடிக்கையின் போது இறந்தவர்களுக்கு நிவாரணம் கோரி விண்ணப்பித்திருந்தவர்கள் தங்கள் பகுதித் தபாற்கந்தோர்களில் தொடர்பு கொண்டு இந்த வவுச்சர்களைப்பெற்றுகேட்கப் பட்ட ஆவணங்களுடன் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## இந்தியாவில் பதிவு செய்திருந்த பத்தாயிரம் தமிழ் அகதிகள் விவரம் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது

தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் பத்தாயிரம் பேரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இந்திய அரசு நடவடிக்கை எடுப்பதாகத் தமிழ் நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன,

பத்தாயிரம் பேரின் பெயர் விவரங்கள் இந்திய அரசினால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகச் சில தொண்டர் நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழ் நாட்டில் பொலிஸில் பதிவு செய்யாதவர்களே அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறியவருகிறது.

இதே வேளை இதுவரை தம்மைப் பதிவு செய்யாத இலங்கையரைத் தமிழக அரசு கைது செய்து விசாரணை நடாத்தி வருவதாகச் சென்னைச் செய்திகள் தெரிவித்தன,

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் எ. பி. சவான் இது குறித்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவே முடிவு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார். 74

## தபால் விநியோகம் இன்று ஆரம்பம்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு அண்மையில் கப்பலில் வந்த வெளியூர்த் தபாற் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்தினரால் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் எடுத்துவரப்பட்டன.

யாழ் பிரதம தபாலகத்துக்குரிய தபாற்பொதிகள் இன்று தரம்பிரிக்கப்பட்டுத் தபால் விநியோக சேவைகள் மேற்கொள்ளப்படுமென தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொருள்களின்றி வடமராட்சிகிழக்குக்கடைகள்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உணவுப் பற்றாக்குறை நீடித்து வருவதாகவும் இப்பகுதி வர்த்தக நிலையங்கள் வெறிச்சோடிக்காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானக்குண்டு வீச்சினால் வெற்றிலைக்கேணிக்கு அண்மையில் உள்ள கிராமப்பகுதி வர்த்தக நிலையங்கள் உணவுப் பொருள்களுடன் சேதமடைந்தன. அப்பகுதி மக்கள் செம்பியன் பற்று, நாகர் கோயில், குடத்தனை ஆகிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தமையடுத்து இப்பகுதி வர்த்தக நிலையங்களிலும் உணவுப் பொருள்கள் முடிவடைந்தன.

ஊரடங்கு அமுலால் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாதிருப்பதாகவும் கையிருப்பிலிருந்த உணவுப் பொருள்கள் முடிவடைந்து விட்டதனால் தற்போது உணவு நிலை படுமோசமடைந்திருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (38

## இந்திய அமைச்சர் சவான் தஞ்சாவூர் விஜயம்

இந்திய வெளியுறவு அமைச்சர் எ.பி சவான் நேற்று ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் மத்திய புலனாய்வுக் குழுவினரைச் சந்தித்து பேச்சு நடாத்தினார்.

விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் சண்முகம் என்ற நபரின் மரணம் என்பவை குறித்து அமைச்சர் சி. பி. ஐ யிடம் விளக்கம் பெற்றார்.

அமைச்சர் சவான் பாதுகாப்புக்கள் உஷார்ப் படுத்தப் பட்டுள்ள தஞ்சாவூர் வேதாரணியம் கரையோரங்களையும் ஹெலிக்கப்டரிலிருந்து பார்வையிட்டார்.

இதனிடையே சந்தேக நபரான சண்முகத்தின் திடீர் மரணம் குறித்து இந்திய எதிர்க்கட்சிகள் புலனாய்வுக் குழுவினரைக் கண்டித்துள்ளன.

## ஒய்வுபெற்ற மூவாயிரம் ஆங்கில ஆசிரியர் நியமனம்!

புதிதாகத் தெரிவு செய்யப் படவுள்ள மூவாயிரம் ஆங்கில ஆசிரியர்களும் தமது நியமனங்களைப் பெறும்வரையில் இவர்களது இடத்துக்கு வெளியிலிருந்தே ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

ஒய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களும் ஆங்கிலப்புலமை வாய்ந்த அரச அதிகாரிகளும் இதற்கெனதெரிவுசெய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## க. பொ. த உயர்தரப்பரீட்சை; திணைக்களம் மௌனம்

அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தர பரீட்சை மற்றும் சாதாரண தரப்பரீட்சைகுறித்துபரீட்சை ஆணையாளர் அதர்வெத முல்லகல்விப்பணிப்பாளருக்கு இதுவரை எவ்வித பதிலும் அனுப்பவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த வெள்ளிக்கிழமை இப் பரீட்சைகளின் விவரம் குறித்து விவரமான விளக்கத்தைக் கல்விப்பணிப்பாளர் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்டமையும் குறிப்பிடத்தக்கது. ப-11

## வெற்றிவேண்டிப் பூஜை

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தற்போது நடை பெற்று வரும் திருவிழாவின் போது களத்தில் நிற்கும் போராளிகளுக்கு ஆசியும் வெற்றியும் வேண்டி விசேட ஆராதனைகளும் மௌனப் பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன.

அல்வாய் தெற்கு பாரதிதாசன் சனசமூக நிலையத்தினரும் புலிகளின் வெற்றிக்காக இவ்வாலயத்தில் 1008 நாம அருச்சனையும் விசேட பூசைகளும் செய்துள்ளனர். (38)

## இடம்பெயர்ந்துள்ள 100குடும்பங்கள் அவல நிலை

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கைகளினால் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி கிராமங்களிலிருந்து வெளியேறிய சுமார் 100 குடும்பங்கள் சுண்டிக்குளம், பூனைத்தொடுவாய் கடற் கரையோரங்களில் தங்கியுள்ளன.

இவர்கள் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளோ தனியார் கடைகளோ இக்கிராமங்களில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவர்கள் பட்டினி நிலையை எதிர் நோக்குவதுடன் நோயுற்ற மக்கள் மருத்துவ வசதி பெற முடியாத அவல நிலையும் ஏற்பட்டுள்ளது. 18

## காயமடைந்த சிறுமியும் மரணமானார்

கடந்த 16 ஆம் திகதி மணற்காட்டில் ஹெலிக்கப்டரில் இருந்து ரொக்கட் தாக்குதலில் படுகாயமடைந்த மேலும் ஒரு சிறுமி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார். மரணமானவர் ஞா. அமலராஜினி என்பவராவார். இவர் ஏற்கனவே மரணமடைந்த சிறுமியின் சகோதரியாவர்.

இவரின் தாய் தந்தை உட்படச் சகோதரர்கள் அனைவரும் படுகாயமடைந்த நிலையில் தற்போது மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 43, 50

## வீர வேங்கைகளுக்கு மல்லாகத்தில் அஞ்சலி

நேற்று முன்தினம் கட்டைக் காட்டுப்பகுதியில்நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் அறுவர் புகழுடல்கள் நேற்று மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

கைலன்(அ.குசந்தன்வட்டுக் கோட்டை), பாண்டியன் (து. கிருஷ்ணகுமார் பண்டத்தரிப்பு), அறிவொளி (ஸ்ரீ. சத்தியசீலன்சுண்டுக்குளி) வில்சன் (வே.சந்திரகுமார் சங்கானை) விஜயன் (வே. மாரிமுத்து கண்டி, மணிவாசகன் (க. ஜெனார்தனன் இணுவில்) பஞ்சன் (சி. உதயராஜா புன்னாலைக்கட்டுவன்)

அஞ்சலிக்கூட்டத்தைத் தொடர்ந்து இவர்களது புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

## வடம. கிழக்கு அரச அதிபர் மயிரிழையில் தப்பினார்!

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் விமானக் குண்டு வீச்சிலிருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார்.

இவர் கடமைக்காக அலுவலகத்தை நோக்கி வெங்காயம் ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த வேளை குண்டு வீச்சு விமானம் குடத்தனைப் பகுதியில் குண்டு வீசிய போது மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். 38

## மீனவ உபகரணங்கள் படையினரால் எரிப்பு

வெற்றிலைக்கேணியில் படையினர் நிலைகொண்டுள்ள எல்லைக்கு உட்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மீனவர்களின் கோடிக்கணக்கான பெறுமதியையுடைய உடமைகள் அனைத்தும் படையினரால் தீவைத்துக் கொழுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆழியவளைப்பகுதியில் இருந்து பார்க்கும் போது இவை எரிந்து புகைமண்டலமாகத் தெரிவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. 43 50

---

**படையினரின்...**

நிலையில் இருந்ததினால் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கமுடியாது போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இராணுவத்தினரின் சடலங்கள் இராணுவ சீருடையிலே காணப்பட்டதுடன்சடலங்கள் பிரேதப் பெட்டிகளிலேயே வைக்கப்பட்டிருந்தன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சிப்பாய்களின் சடலங்களைப்பார்வையிட்டனர். (74-79).

---

**இலங்கை...**

காமையால் மக்கள் பலசிரமத்திற்கு உள்ளாகி வருவதையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. 74

---

**மற்றறிகள்...**

போன்ற பொருள்களையும் மேலதிகமாக உதவுமாறும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

---

**ஆளியவளை—**

பகுதி நோக்கி முன்னேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு படையினரைப் பின்வாங்கச் செய்தனர்.

இந்த அதிரடித்தாக்குதலின் போது படையினர் தரப்பில் பலர் கொல்லப் பட்டும் காய மடைந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது, (43 50)

---

**செபஸ்தியார்...**

வழக்கம்.

இத்தேவாலயம் அமைந்துள்ள புல்லாவெளிக் கிராமம் வெற்றிலைக்கேணிக்குத்தென் புறமாகவும், ஆனையிறவுக்கு வடக்குப்புறமாகவும்; இயக்கச்சியில் இருந்து கொம்படி வெட்டைக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (43-50)

---

**29 படையினரின்...**

தலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட செயலகத்தில் வைத்து 29 சடலங்கள் செஞ்சிலுவையினரிடம் ஒப்படைக்கபபட்டன.

சடலங்கள் ஒப்படைப்புத் தொடர்பான பத்திரத்தில் புலிகளின் தரப்பில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜனும், சர்வதேச செஞ்சிலுவை தரப்பில் பிரட்கிறிமும் ஒப்பமிட்டனர்.

பின்னர் சடலங்கள் பருத்தித்துறைத் துறைமுகம் எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து படகுகள் மூலம் சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டு நடுக் கடலில் வைத்து கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

படையினர் சடங்களைக் காரைநகர் எடுத்துச்சென்றனர். (74, 79, ப- 11)

---

**கட். காட்டில்...**

மடைந்த ஒருவர் எட்டுநாள்களின் பின்னர் சிகிச்சைக்காக ஆஸ்பத்தியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கடற்படைப் பீரங்கிப்படகுச் ஷெல் வீச்சினால் காலில் காயமுற்ற சிறி மணி ஜோண்சன் பெனடிற் என்டவர்கடந்த ஒரு வாரகாலமாக சிகிச்சையின்றி அவதியுற்றார்.

இவர்சைக்கிள் மூலமாகவும் உறவினர்கள் மூலமாகவும் தூக்கிச்செல்லப்பட்டு புதுக் குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் இவர் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டார். (18)

---

## சமாசக் கூட்டம்

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் போர்க்காலச் செயல்பாடுகள் பற்றி கலந்துரையாடல்ஒன்று எதிர்வரும் வெள்ளி காலை 10 மணிக்கு வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில்நடைபெறும்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 24.07·91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.